08.10.2025 Mcop 305/2022 ம.சா. 1 வள்ளியம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் பீடி சுற்றும் மற்றும் தையல் வேலை செய்கிறேன். விபத்து எங்கு, எப்போது நடந்தது என்றால் 9.7.2022 ம் தேதி நான் பயணிகள் ஆட்டோவில் வந்த போது விபத்து ஏற்பட்டது. என்னுடன் ராமலட்சுமி, தங்கவிஜயா, பரமதுர்கா, கனியம்மாள் ஆகியோர்கள் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். ஆட்டோவில் 4 பேருக்கு அதிகமாக பயணம் செய்ததால் ஆட்டோ கவிழ்ந்து ஆட்டோ ஓட்டுனர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு வலதுகால் தொடையிலும், பாதத்திலும், நெற்றியிலும், தாடையிலும் காயம் ஏற்பட்டது. ஆட்டோவில் ஓட்டுனர் உள்பட 4 நபர்கள் மட்டுமே பயணம் செய்ய முடியும் என்றால் சரிதான். கூடுதலான நபர்கள் பயணம் செய்ததால் பாரம் தாங்க முடியாமல் ஆட்டோ கவிழ்ந்தது என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணமாக கூறும் இரண்டு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. எனக்கு பெருவிரலில் எலும்பு முறிந்ததாலும், தொடை எலும்பு முறிந்ததாலும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. நான் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுடன் மருத்துவ பரிந்துரை சீட்டுக்கள் தாக்கல் செய்யாததால் அந்த தொகை எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் அதிகபடியான இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக நான் மருத்துவ ரசீதுகளை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கி உள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. முறையான ஓட்டுனர் உரிமம் இல்லாமல் 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தை இயக்கி காப்பீடு விதிகளை மீறியுள்ளதால் காப்பீடு

கழகம் எவ்வித இழப்பீட்டு தொகை வழங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. 2ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.